# RCS உரையாடல்

**Jibe Mobile Ltd. ("Jibe Mobile")**
70 Sir John Rogerson's Quay, Dublin 2, Ireland
https://support.google.com/

மார்ச் 16, 2023 அன்று புதுப்பிக்கப்பட்டது
முந்தைய பதிப்பு: டிசம்பர் 21, 2020

ஒப்பந்தச் சுருக்கம்

- இந்த ஒப்பந்தச் சுருக்கத்தில் EU சட்டத் தேவையின்படி நாங்கள் வழங்கும் சேவையின் முக்கியக் கூறுகள் விவரிக்கப்பட்டுள்ளன[1].
- வழங்கப்படும் சேவைகளை ஒப்பிட்டுப் பார்க்க உங்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.
- எங்கள் சேவை குறித்த முழுமையான தகவல்கள் பிற ஆவணங்களில் உள்ளன.

சேவைகள்
'Google வழங்கும் Messages' ஆப்ஸைப் பயன்படுத்தும் பயனர்களுக்கு மேம்படுத்தப்பட்ட, சிறந்த மெசேஜிங் அனுபவத்தை RCS உரையாடல் வழங்குகிறது. RCS உரையாடல் மெசேஜ்களை அனுப்புவதற்கு இணைய இணைப்பு தேவை. சேவைக்கான குறைந்தபட்ச தரநிலைகள் எதையும் வழங்கவில்லை என்றாலும், போதுமான திறனையும் கவனத்தையும் பயன்படுத்தி RCS உரையாடலை Jibe Mobile வழங்குகிறது.

விலை
RCS உரையாடலுக்கு கட்டணம் எதுவும் இல்லை மேலும் அதன் பயன்பாடு Jibe Mobile சேவை விதிமுறைகளுக்கும் (https://jibe.google.com/policies/terms/ பக்கத்தில் கிடைக்கிறது) Google சேவை விதிமுறைகளுக்கும் (https://policies.google.com/terms பக்கத்தில் கிடைக்கிறது) இணங்குவதாக இருக்க வேண்டும்.

கால அளவு, புதுப்பித்தல், முடக்குதல்
பதிவு செய்த உடனேயே RCS உரையாடலைப் பயன்படுத்தலாம். RCS உரையாடலைக் குறிப்பிட்ட கால அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று எந்தவொரு நிபந்தனையும் இல்லை, எப்போதும் வேண்டுமானாலும் அதைப் பயன்படுத்துவதை நீங்கள் நிறுத்திக்கொள்ளலாம்.

மாற்றுத்திறனுள்ள பயனர்களுக்கான அம்சங்கள்
RCS உரையாடலுடன் ஒரு ஸ்கிரீன் ரீடரை நீங்கள் பயன்படுத்தலாம். https://support.google.com/messages/answer/6105764?hl=ta பக்கத்தில் கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

தொடர்புடைய கூடுதல் தகவல்கள்
வாடிக்கையாளர் உதவிச் சேவைகள்: RCS உரையாடல் தொடர்பாக ஏதேனும் உதவி தேவைப்பட்டால் https://support.google.com/ பக்கத்தைப் பாருங்கள்.

---

[1] ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் உத்தரவு (EU) 2018/1972ன் சட்டவிதி 102(3) மற்றும் ஐரோப்பிய மின்னணுத் தொடர்புக் குறியீட்டை (European Electronic Communications Code) கட்டமைக்கும் 11 டிசம்பர் 2018ன் கவுன்சில் (OJ L 321, 17.12.2018, ப. 36).

வழக்குகள்: https://ec.europa.eu/consumers/odr/main/?event=main.adr.show2 பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ள, வழக்கிற்கான மாற்றுத் தீர்வு வழங்குநரிடமோ உங்கள் நாட்டின் சட்டப்பூர்வத் தேவையின் அடிப்படையில் வேறொரு வழங்குநரிடமோ உங்களால் புகாரளிக்க முடியலாம். Google சேவை விதிமுறைகளில் கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் சிக்கல்கள்: பாதுகாப்பு மற்றும் தனியுரிமை தொடர்பான சிக்கல்களைத் தாமதமின்றிக் கண்டறிந்து உடனடியாக அவற்றுக்குப் பதிலளிக்கும் ‘சிக்கல்களை நிர்வகிக்கும் திட்டம்’ ஒன்றை Jibe Mobile கொண்டுள்ளது, இது வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரமும் விழிப்புடன் செயல்பாட்டில் இருக்கும். உங்கள் ஆன்லைன் பாதுகாப்பை நிர்வகிக்க, பாதுகாப்புச் சரிபார்ப்புப் பட்டியல் ஒன்றையும் Jibe Mobile வழங்குகிறது.

தனிப்பட்ட தரவு: RCS உரையாடலுக்குப் பதிவு செய்வதற்கு மொபைல் எண்ணை நீங்கள் வழங்க வேண்டும். RCS உரையாடலைப் பயன்படுத்தும்போது Jibe Mobile சேகரிக்கும் தனிப்பட்ட தரவு குறித்த கூடுதல் தகவல்களை Google தனியுரிமைக் கொள்கை (https://policies.google.com/privacy பக்கத்தில் கிடைக்கிறது) வழங்குகிறது. Google தனியுரிமைக் கொள்கை உங்களுக்கும் Jibe Mobileலுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அல்லது இந்தச் சுருக்கவிவரத்தின் பகுதி இல்லை.